**நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகளுக்கு அத்தியாவசிய தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் - வேலைத்தளங்களைப் பாதுகாப்பாகவும், சுகாதாரத்துடனும் வைத்திருத்தல்**

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் செய்திகள் (கொழும்பு) - நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றமையால், கொவிட்-19 ஆல் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியிலும் அவற்றின் திறன்மிக்க தொடர்ச்சியான வணிக செயற்பாடுகள் புதிய இயல்பு நிலைமையில் முக்கியமானவை. வேலைத்தளங்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் வேலைத்தளங்களை கொவிட்-19 பரவலுக்கான இடமாக மாற்ற இடமளிக்காது தொடர்ச்சியான வணிகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு முக்கிய அங்கமாக காணப்படுகின்றன. நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் பொதுவாக 50 க்கும் குறைவான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளதுடன், அவற்றுள் பலவும் முறைசாரா தொழிற்துறையைச் சார்ந்துள்ளன.

இதுபோன்ற தொழில் முயற்சிகள் பெரும்பான்மையாக குவிந்து காணப்படுகின்ற களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பல நூற்றுக்கணக்கான நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் வேலை செய்ய பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான இடங்களாக இருப்பதை உறுதி செய்யும் முயற்சியில், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் செயற்திட்ட சேவைகளுக்கான அலுவலகத்துடன் இணைந்து ரூபா 47 மில்லியன் மதிப்புள்ள தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை கொள்வனவு செய்து, மேற்குறிப்பிட்ட தொழில் முயற்சிகளுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது. ஐநா கொவிட்-19 பதில் நடவடிக்கை மற்றும் மீட்டெடுப்பிற்கான பல்துறை பங்காளர் நம்பிக்கை நிதியத்தின் நிதியுதவியுடன், தக்க சமயத்தில் முன்னெடுக்கப்படும் இந்த பதில் நடவடிக்கையானது, இலங்கையில் நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் சார்ந்த தொழிற்துறையை மீட்டெடுத்து, ஆரோக்கியமான சமூக-பொருளாதாரத்திற்கு உதவுவதில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு முயற்சிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் விநியோக நடவடிக்கையானது 2020 நவம்பர் 18 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் சிறு தொழில் முயற்சிப் பிரிவின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகிறது. தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண கருவிகளில் கை கழுவும் அமைப்புகள், கை சுத்திகரிப்பான் போத்தல்கள், முதலுதவி கருவிகள், முகக்கவசங்கள், வருகையாளர் பதிவேடுகள், சவர்க்காரக் கட்டிகள், பேப்பர் திசு பக்கற்கள், பேப்பர் துவாய்த் துண்டு பக்கற்கள், கையால் பிடிக்கப்படும் டிஜிட்டல் வெப்பமானிகள், கழிப்பறை சுத்திகரிப்பான் போத்தல்கள், கையுறைகள், மூடிகளைக் கொண்ட குப்பைத் தொட்டிகள் ஆகியன அடங்கியுள்ளன.

தொழில் அமைச்சின் துணையுடன், சிறு தொழில் முயற்சிப் பிரிவின் அலுவலர்களால் முன்னெடுக்கப்பட்ட துரித மதிப்பீட்டுகள் மூலம் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களைத் தளமாகக் கொண்ட தொழில் முயற்சிகள் மற்றும் அவற்றின் குறிப்பிட்ட தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண தேவைப்பாடுகள் அடையாளம் காணப்பட்டன. சுற்றுலாத்துறை-தங்குமிடம், உணவு மற்றும் உணவு பதப்படுத்துதல், புடவை, கைவினை மற்றும் விவசாய வணிகத் தொழிற்துறைகள் போன்ற பல்வேறு தொழிற்துறைகளில் உள்ள தொழில் முயற்சிகள், அதிலும் குறிப்பாக பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மற்றும் பெண்களுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் இதன் கீழ் இலக்கு வைக்கப்பட்டு உரிய மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கம்பஹா மாவட்டத்தில் களனி, மீரிகம, நீர்கொழும்பு, கட்டான பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், களுத்துறை மாவட்டத்தில் பேருவளை, களுத்துறை, பாணந்துறை, புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இத்தொழில் முயற்சிகள் அமைந்துள்ளன.

தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத் தொகுதி விநியோகங்களின் மற்றுமொரு கட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இது மேற்குறிப்பிட்ட இரு மாவட்டங்களிலும் மீதமுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் எட்டவுள்ளது.

தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத் தொகுதி விநியோகத்திற்கு இணையாக நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் தொடர்பான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆபத்து மதிப்பீடும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டு நடவடிக்கைகளை எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து தொழில்முயற்சியாளருக்கு பயிற்சி அளித்தல், வணிக மேம்பாடு, சமூக உளவியல் ஆதரவு மற்றும் கடன் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை எளிதாக்குதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட தொழில்முயற்சி மட்ட பயிற்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. நுண் மற்றும் சிறு தொழில் முயற்சிகளுக்கான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆபத்துக்கள் மற்றும் ஏற்பாட்டு நடவடிக்கைகள், நுண் மற்றும் சிறு தொழில் முயற்சி உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூக உளவியல் ஆபத்துக்கள் மற்றும் அரசாங்கம் வழங்கும் கடனுதவியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தும் தேசிய பிரச்சாரத்துடன் இந்த முயற்சி இணைக்கப்படும்.

இந்த முயற்சி திறன்மிக்க வகையில் அமுலாக்கம் செய்யப்படுவதற்காக பல அரச நிறுவனங்களின் வலுவான பங்காண்மைகளைப் பெற்றுள்ளது. குறிப்பாக தொழில் அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு, தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம், மத்திய வங்கி மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் ஆதரவு கிடைத்துள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம், உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், இலங்கை தொழில்வழங்குனர் சம்மேளனம், பல்வேறு வணிக வங்கிகள், மகளிர் வர்த்தக சபை, மனநல நிறுவகம், மருத்துவ மானுடவியலாளர்கள், உளவியலாளர்கள், ஊடகங்கள் மற்றும் திரைப்பட தயாரிப்பாளர்கள் போன்ற ஏனைய தரப்பினரின் ஆதரவும் இதற்குக் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.